யாழ்ப்பாணம்

Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | சித்திரை 19 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | [02-05-93] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 73

## நிலவரங்களை கையாள அமைச்சரவை உப குழு

ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணம் குறித்து அனுதாபப் பிரேரணை ஒன்றை நேற்று அமைச்சரவை நிறைவேற்றியது. இச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்ததுடன் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்வரையான காலத்தை தேசிய துக்க தினங்களாகவும் பிரகடனம் செய்துள்ளது. மேலும் நாட்டு நிலவரங்களை வழிநடத்தவும், இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளவும் முழு அமைச்சரவையும் ஒரு குழுவாக இணைந்து செயற்படுவது என்றும் அமைச்சரவை (4ஆம் பக்கம் பார்க்க)

## மேதினத்தில் மாபெரும் மக்கள் எழுச்சி



நேற்றைய மேதினப் பேரணியில் தலைவர் பிரபாகானின் படத்தை மக்கள் தாங்கிச் செல்வதையும், பேரணியில் பங்குகொண்ட சர்வமத குருமார்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தொழிலாளர் தினமான மேதினம் யாழ். குடாநாட்டில் நேற்று எழுச்சி பொங்க அனுஷ்டிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குகொண்ட பிரமாண்டமான எழுச்சிப் பேரணியும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

நேற்று மாலை 2-30 மணியளவில் யாழ் ஆஸ்பத்திரிவீதி, கண்டிவீதிச் சந்தியில் இருந்து எழுச்சிப்பேரணி ஆரம்பமாகியது. பேரணியின் ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் விடுதலைப்புலிகளின அணிவகுப்பும் அதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் அணிவகுப்பும் தொடர்ந்து தமிழீழக் காவல்துறையினதும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினது அணிவகுப்பும் இடம்பெற்றது. இவ் அணிவகுப்புக்களைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனது உருவ படம்எடுத்துச்செல்லப்பட்டது இவற்றைத் தொடர்ந்து பல்வேறு தொழிற்சங்கங்கள், தொழிலாளர் அமைப்புக்கள் ஆகியவற்றின் தொழிலாளர்கள் அணிவகுத்துச்சென்றனர்.

பேரணியில் சென்றவர்கள் பல எழுச்சிக்கோஷங்கள் தாங்கிய பதாகைகளையும் சுலோகங்களையும் தாங்கியபடி சென்றுகொண்டிருந்தனர்.

சிறிலங்காஅரசின் பொருளாதார அடக்குமுறை, இராணுவ அட்டூழியங்கள் ஆகியவற்றையும், இவற்றுக்கெதிராகப் போராட்ட வளர்ச்சிக் கட்டங்களைச் சித்தரிக்கும் பல்வேறு ஊர்திகளும் பேரணியின் இடையிடையே நகர்ந்து சென்றுகொண்டிருந்தன.

ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதி, நல்லூர்வீதி, அரசடிவீதி, பிறவுண்வீதி ஆகியவற்றின் ஊடாக பல்கலை மருத்துவ பீட மைதானத்தை இப் பேரணி சென்றடைந்தது.

இப்பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அரசுக்கு எதிராகவும். அரசின் பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராகவும் உரத்த குரலில் கோஷம் எழுப்பியவாறு சென்றனர் குறிப்பிட்ட ஒரு புள்ளியை இப்பேரணிகடந்துசெல்வதற்கு மூன்று மணிநேரம் எடுத்தது.

பேரணி மைதானத்தை அடைந்ததும், மைதானம் மக்கள் கடல்போல் காட்சியளித்தது. மாலை 5.00 மணியளவில் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் மாபெரும்பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட விடுதலைப் புலிகளின் பல பிரமுகர்களும் இக்கூட்டத்தில் உரைநிகழ்த்தினர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், வடபிராந்திய வகுப்புத்தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. அருமைத்துரை, விடுதலைப் புலிகள் அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர்திரு கரிகாலன், விடுதலைப் புலிகளின் நீதித் துறைப் பொறுப்பாளர் திரு. பரா, தமிழீழக் கல்வி மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், தென் தமிழீழ மக்களின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் திரு. ரவி, தெங்கு பனம் பொருள் உற்பத்திப் பிரிவைச் சேர்ந்த திரு. கந்தசாமி, விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி, வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த த. சுந்தரலிங்கம், அங்கவீனர் புனர்வாழ்வுச்சங்கத் தலைவர் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர்.

# குண்டு வெடிப்பில் பிரேமதாசா பலி;

# தென்னிலங்கையில் அரசியல் கொந்தளிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று நண்பகல் 12 45 மணியளவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். ஆமர்வீதிச் சந்தியில் மேதின ஊர்வலத்திற்கு தலைமைதாங்கி சிறந்த ஜீப்வண்டியில் செல்கையில் இச் சம்பவம் இடம்பெற்றது.




# குண்டு வெடிப்பில் பிரேமதாசா பலி;

# தென்னிலங்கையில் அரசியல் கொந்தளிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று நண்பகல் 12 45 மணியளவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். ஆமர்வீதிச் சந்தியில் மேதின ஊர்வலத்திற்கு தலைமைதாங்கி திறந்த ஜீப்வண்டியில் செல்கையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பிரேமதாசா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் பெரும் அரசியற் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ள அதேவேளை மக்களை அமைதி பேணுமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது



சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தினைப் படத்தில்காணலாம். இதில் தற்கொலைவீரனின் சைக்கிள்வண்டியையும், சிதைந்த பல உடல்களையும் காணலாம்

## பிரேமாவுடன் மேலும் பதினேழு பேர் பலி

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்பில் ஜனாதிபதி பிரேமதாசா உட்பட 17 பேர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில், அநேகர் சிறிலங்காஜனாதிபதியின்மெய்ப்பாதுகாவலர்கள் எனவும் அத்தோடு சில முக்கிய அரசியற் பிரமுகர்களும் அடங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## தற்கொலைப்படை வீரரே தாக்கினார்

(கொழும்பு)

கொழும்பு நகரில் மேதினத்தை முன்னிட்டு நடைபெற்றபேரணியில்பிரேமதாசா தலைமை ஏற்றுச் செல்கையில் தற்கொலைக் குண்டு தாங்கிய ஒருவர் தாக்கியதிலேயே இவர் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைக் குண்டு வீச்சாளர் சைக்கிளில் வந்து பிரேமதாசா வந்து கொண்டிருந்த ஜீப் மீதுமோதியபோது இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பிரேமதாசாவின் மெய்ப்பாதுகாவலர் இருவர் உட்பட பதினேழுபேர் கொல்லப்பட்டனர்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து மேதினப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

## பிரேமாவுடன்கொல்லப்பட்ட சிலரின் விபரம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது இவர்களில் முக்கியமான அதிகாரிகள் விபரம் வருமாறு:

★ விசேட பொலிஸ் செயற்பாட்டு அதிகாரி சரத்ரவீந்திர

★ இதே பிரிவைச் சேர்ந்த தர்மரட்ண, தர்மசேன.

★ ஜனாதிபதியின் பொலிஸ் பாதுகாப்பு அதிகாரி சிறிமல் பெரேரா.

★ சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொனி குணசிங்க(இவர் லலித் கொலை விசாரணையில் ஈடுபட்டவர்)

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பதில் ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க


(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாச குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதை அடுத்து பதில் ஜனாதிபதியாக பிரதமர் டி. பி. விஜயதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இவர் பிரதம நீதியரசர் சில்வா முன்னிலையில் முப்படைத் தளபதிகள் உடன் இருக்க பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

சிறிலங்காவின் அரசியலமைப்பு சட்டப்படி பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)



## பிரேமா பற்றிய சில குறிப்புக்கள்

காலியைச் சோந்த றிச்சேட் றணசிங்காவுக்கும் களுத்துறையைச் சேர்ந்த வட்டுவித்த ஜெயசிங்கா ஆராச்சிக்கே ஹாமினிக்கும் மகனாக பிரேமதாசா 23-06-1924இல் கொழும்பு டயஸ் பிளேசில் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியைக் கொழும்பு டாம் வீதியிலுள்ள ஹெவேட் மகளிர் கல்லூரியிலும், மருதானை லோறன்ஸ் கல்லூரியிலும் பெற்றார். இடை நிலைக் கல்வியை மருதானை புனித யோசப் கல்லூரியில் பெற்றார்.

1939இல் சிறி சுசரித்த இயக்கத்தினை ஆரம்பித்து அதன் முழுநேர அமைப்பாளராகவும் இருந்தார்.

1949இல் ஏ. ஈ. குணசிங்காவின் இலங்கைத் தொழிலாளர் இயக்கத்தில் சேர்ந்து தனது அரசியல் மற்றும் தொழிற்சங்க வாழ்க்கையில் பிரவேசித்தார். அதே ஆண்டில் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

1950இல் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் புனித செபஸ்தியார் வட்டாரத்தில் போட்டியிட்டுத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

1955இல் கொழும்பு மாநகரசபையில் உதவி மேயரானார்.

1956இல் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரூவான்வெலத் தொகுதியில் கலாநிதி என். எம். பெரேராவுக்கு எதிராகப் போட்டியிட்டுத் தோல்வியுற்றார்.

1957இல் டட்லி சேனநாயக்கா மற்றும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் சேர்ந்து பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிரான கண்டி யாத்திரையை மேற்கொண்டார். ஊர்வலம் இம்புல்கொடவில் தடுத்து

(3ஆம் பக்கம் பார்க்க)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



ஸ்ரீமதி

### இராசா-சிவபாக்கியம்

அன்னை மடியில்: 01-08-1943

ஆண்டவன் அடியில்: 02-04-1993

பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்துவிட்ட எங்கள் குடும்ப விளக்கே
எமது வீடு இருண்டு விட்டாலும்
விண்ணுலகம் வெளிச்சம் பெறட்டும்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் உதவிகள் பலபுரிந்த உற்றார் உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், எமது இல்லத்தில் 2-5-93 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''பாக்கியவாசா''
நாகர்கோவில் தெற்கு,
நாகர்கோவில்.
01-05-1993

அன்புக்கணவரும்,
பிள்ளைகளும்.

[சி-6538]

## மே தினம்

புறப்படும் புலிப்படை போர்க்குரல் கேட்குது
மறக்குலத் தமிழனின் உடலெல்லாம் சிலிர்க்குது
பசித்திருக்க உழைத்து ஓடாகினோம் — இனி
உயிர்த்திருக்க போராட ஒன்றிணைவோம்

உழைக்கும் கரங்கள் இவை
புது உலகினை படைக்கும் கரங்கள் இவை
நிலத்தில் உழுபவன் நிலத்தில் வாடுகிறான்
நிலத்தை ஆள்பவன் நித்தம் கொழுக்கிறான்
கலப்பை பிடிக்கும் எங்கள் கைகள்
காவியம் படைத்தது இந்த நாளில்
எம் தேசியத் தலைவரின் வழிகாட்டலில்
நாம் உரிமைகளுக்காக ஒன்று திரள்வோம்.

தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர்கள்
பருத்தித்துறை சாலை

(சி/6548)

## ஆவணப் படுத்தல்

1984-1990 வரை வெளியிடப்பட்டு வந்த வீர வேங்கை பத்திரிகையை நாம் ஆவணப்படுத்த (பாதுகாக்க) விரும்புவதால் இப்பத்திரிகை வைத்திருப்பவர்கள் இதனை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


முகவரி:
மாவீரர் படிப்பகம்
பலாலிவீதி, கோண்டாவில்
(4802)

## நன்றி நவில்கின்றோம்...

எனது குடும்பத்தாருடைய அடையாள அட்டைகள் தாண்டிக்குளத்தில் காணாமற் போய் மிகுந்த அவதிக்குள்ளாயிருந்த சமயம் அவைகளை கண்டெடுத்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்த தாண்டிக்குளம் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவுப் பொறுப்பாளருக்கும் உரிய விளம்பரம் கொடுத்து அவைகளைப் பாதுகாத்து தந்த ஈழநாதம் நிறுவனத்திற்கும் என் நன்றியையும் அன்பையும் தெரிவிக்கின்றேன்.

சின்னத்தம்பி ஆறுமுகம் (அப்புத்துரை)
ஓய்வு பெற்ற தபால் இலாகாஊழியர்
காங்கேசன்துறை

பண்டத்தரிப்பு. [4798]




## Tasty இன் முதலாவது வெற்றுப்போத்தல் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம்

1-ம் பரிசு இல.090 பா. மதனி சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி
2-ம் ,, இல 264 து. கமல் 26,கடுக்காயடி லேன்,நல்லூர்,யாழ்ப்பாணம்
3-ம் ,, இல.431 ம.ரத்தினசிகாமணி கொம்மான்துறை,வல்வெட்டித்துறை

ஆறுதல் பரிசு:

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | இல. 813 | T. சதானந்தன் | அம்மன் கோயிலடி, கோண்டாவில். |
| 2-ம் பரிசு | இல. 040 | பாமா | கல்வயல், சாவகச்சேரி. |
| 3-ம் பரிசு | இல. 441 | வனிதாமணி | அம்மன் கோயிலடி. வதிரி கரவெட்டி. |
| 4-ம் பரிசு | இல. 316 | P. வடிவேல் | 136, K. K. S. வீதி, சுன்னாகம். |
| 5 ம் பரிசு | இல. 651 | J..Rசபாநாயகம் | 631, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் |
| 6-ம் பரிசு | இல. 493 | கு. ரமணி | மல்னேரி, வல்வெட்டித்துறை. |
| 7-ம் பரிசு | இல. 401 | V.M.சுப்பிரமணியம் | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| 8-ம் பரிசு | இல. 305 | K சுதன் | சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். |
| 9-ம் பரிசு | இல. 412 | இ. வாகீசன் | துருபராஜ் வீதி, நெல்லியடி. கரவெட்டி. |
| 10-ம் பரிசு | இல. 223 | K.கணேசதாசன் | 27/40 புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். |

காலக் கிரமத்தில் பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாவது சீட்டிழுப்பு மே மாதம் 30-ம் திகதி இடம் பெறும். இன்றே போத்தல்களை ஒப்படைத்து இரண்டாவது சீட்டிழுப்பில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

(சி-6547)

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-02

1988 ஆம் ஆண்டு திருமலை பன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். நாதன் (நடராசா சண்முகம்-பன்குளம்-திருமலை)

மோகன் (வடிவேல் இலங்கேஸ்வரன்-உவர்மலை திருமலை)

மன்னார்-திராட்டிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

கர்ணன் (சுப்பிரமணியம் ஆனந்தநாதன்-ஆலங்கேணி, திராட்டிக்குளம் - பூநகரி - மன்னார்)

1989 ஆம் ஆண்டு யாழ்-பருத்தித்துறை 1-ம் கட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

கப்டன் குட்டி/தரன் (நாகராசா ஞானகுலசிங்கம்-அரசடி, தொண்டமானாறு-யாழ்)

இதே சம்பவத்தின் போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழ் மக்கள்.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

ஜெயக்கொடி (கந்தையா இராசபதி- ஊஞ்சல்கட்டி, காஞ்சூரை மோட்டை- நெடுங்கேணி-மணலாறு)

மட்டு-பெரியபுல்லுமலையில் கூட்டுறவுக்கடையில் பொருட்கள் வாங்கி வந்தவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6543)

# வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான

எமது வீடு இருண்டு விட்டாலும்
விண்ணுலகம் வெளிச்சம் பெறட்டும்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றி அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் உதவிகள் பலபுரிந்த உற்றார் உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், எமது இல்லத்தில் 2-5-93 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''பாக்கியவாசா''
நாகர்கோவில் தெற்கு,
நாகர்கோவில்.
01-05-1993

அன்புக்கணவரும்,
பிள்ளைகளும்.

[சி-6538]

8-ம் பரிசு இல. 305 K சுதன் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
9-ம் பரிசு இல. 412 இ. வாகீசன் துருபராஜ் வீதி, நெல்லியடி. கரவெட்டி.
10-ம் பரிசு இல. 223 K.கணேசதாசன் 27/40 புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

காலக் கிரமத்தில் பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாவது சீட்டிழுப்பு மே மாதம் 30-ம் திகதி இடம் பெறும். இன்றே போத்தல்களை ஒப்படைத்து இரண்டாவது சீட்டிழுப்பில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

(சி-6547)

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

மட்டு-பெரியபுல்லுமலையில் கூட்டுறவுக்கடையில் பொருட்கள் வாங்கி வந்தவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6543)

# வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான

# வருடாந்த வசந்தோற்சவ விழா

## காலம்:- 2. 5. 1993 [இன்று] ஞாயிற்றுக்கிழமை

## விசேட நிகழ்ச்சிகளாக

### பகல் நிகழ்ச்சிகள்:-

★ கோண்டாவில் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்
★ அளவெட்டி சிதம்பரநாதன் குழுவினர்
★ இணுவையூர் வாகீசன் இரத்தினகுமார் குழுவினர்
ஆகியோர்களின் நாதஸ்வர கச்சேரியும்,

### இரவு நிகழ்ச்சிகள்

மேற்படி குழுவினரின் நாதஸ்வரக்கச்சேரியும், உடுப்பிட்டியூர் வானம்பாடி வில்லிசைக் குழுவினரின் வில்லிசைநிகழ்ச்சியும்,

விசேட நிகழ்ச்சியாக
"யாழ் ஸாரங்காஸ்" இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

இங்ஙனம்
11-ம் திருவிழா உபயகாரர்
அம்மன் கோவிலடி.

(சி-6549)

சிந்தனைக்கு

ஒரு நாள் கவலை ஒரு மாத மகிழ்ச்சியை விட நீளமானது.

- சீனப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## மீண்டும் ஒரு தடவை சுயரூபம் வெளிப்பட்டது

சிறிலங்காவில் அரசியல் நெருக்கடி தீவிரமாகும் போதெல்லாம் அவை தமிழர் மீது இனக்கலவரங்களாகவும், வன்முறைகளாகவும் திசைதிருப்பிவிடப்படுவதே வழமையாகும். இம்முறையும் லலித் கொலையுடன் தோன்றிய அரசியல் நெருக்கடியின்போது லலித்தைக் கொன்றவர்கள் விடுதலைப் புலிகள் எனக் கூறி சிங்களவரின் ஆவேசத்தை திசை "திருப்பிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாயினும் அது வெற்றி பெறவில்லை. ஆயினும், லலித் கொலையுடன் சம்பந்தப்பட்ட அரசியல் சதுரங்கத்தில் முதல் வெட்டுக்குக் கொடுக்கப்பட்ட காய் தமிழர்தான்.

லலித் கொலை செய்யப்பட்டபோது எதிர்க்கட்சியினர் நேரடியாகவே அரசாங்கத்தைக் குற்றம் சாட்டினர். அரசாங்கமே கொலைக்குப் பொறுப்பென்றனர். பொலிஸார் பாதுகாப்பு கொடுக்கத் தவறி விட்டதாகத் தெரிவித்தனர். கொலை நடந்த கிருலப்பனைப் பகுதிக்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரியும் மேலிடத்தின் உத்தரவுப்படியே கூட்டத்திற்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இக்குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கம் அலட்டிக் கொள்ளவில்லை. பாதுகாப்பு அவசியமில்லை எனக் கூறிய மேலிடத்து அதிகாரி மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் தலைநகரில் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அரசாங்கமோ அன்றி பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சரோ பதவி விலகவில்லை. அதாவது 'ஜனநாயக ரீதியான மரபுகள்' பேணப்பட வில்லை.

ஆனால் தமிழ்க் குழுவான ஈ. பி. டி. பி. ஜனாதிபதி பிரேமதாசாவின் தனிப்பட்ட படையாகசெயற்படுகின்றது. அதனைக் கொழும்பிலிருந்து வெளியேற்றவேண்டும்என்றஎதிர்க்கட்சிகளின்கோரிக்கை மட்டும் திடுதிப்பென அரசாங்கத்தால்நிறைவேற்றப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து திருமலைக்கு உடனடியாக அவர்கள் 'பார்சல்' பண்ணப்பட்டார்கள்.

மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியில் இருப்பவர்கள் அரச இராணுவத்தையோ அன்றிப் பொலிஸ் படையையோ, நாட்டின் புலனாய்வுத்

# பிரேமாவின் கொலைக்களம் ரூபவாஹினி ஒளிபரப்பியது

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற மேதின ஊர்வலத்தின்போது மக்கள் மத்தியில் நின்று பிரேமதாசா தானே கட்சி தொண்டர்களையும், மேதின ஊர்திகளையும் நெறிப்படுத்தி நின்றதையும், அதன்பின்னர் அவர் திறந்த ஜீப் வண்டியில் ஏறிச் சென்ற அவரது இறுதிக் காட்சியையும் ரூபவாஹினி காண்பித்தது.

அதன் பின்னர் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தவர்களின் சிதைந்த உடல்களை இராணுவத்தினர் தமது வாகனங்களில் தூக்கிச் சென்று ஏற்றினர். காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் வண்டிகளில் ஏற்றிச்செல்லப்பட்டனர்.

பிரேமதாசாவின் உடல் குண்டுவெடித்ததைத் தொடர்ந்து வீழ்ந்து கிடந்த இடத்தில் இரத்தவெள்ளம் காணப்பட்டது. உடலும் உருக்குலைந்து காணப்பட்டது. செருப்பு ஒன்றும் அவர் அருகில் காணப்பட்டதையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது.

முன்னதாக இவர் திறந்த வண்டியொன்றில் மக்களைப் பார்த்துக் கையசைத்தவாறு வந்துகொண்டிருந்தார்.

இடையிடையே இறங்கி அங்குநின்ற மக்களுடன் கதைத்துக்கொண்டு நின்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை தற்கொலைப் படையைச் சேர்ந்தவரின் சைக்கிள் சிதறிய நிலையில் தெருவில் காணப்பட்டது. சிறிய ஒலிபெருக்கி சாதனம்ஒன்றும், மின் பரிசோதிக்கும் ரெஸ்ரர் ஒன்றும் தரையில் காணப்பட்டதை ரூபவாஹினி காண்பித்தது.

## வானொலி, ரி. வீயில் சோக கீதம் ஒலிபரப்பு

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசா குண்டுவெடிப்பில்கொல்லப்பட்டதை அடுத்து வானொலி, தொலைக்காட்சி சேவைகள் அனைத்தும் தமது சேவைகளை இடைநிறுத்தி சோககீதத்தை ஒலிபரப்பிய வண்ணம் உள்ளன. கொழும்பில் பதற்றநிலை காணப்படுவதாகவும், பெருமளவில் படைகள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொழும்பின் பாதுகாப்பு ராணுவத்தின்பொறுப்பில்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு பொறுப்பை இராணுவம் பொறுப்பேற்றுள்ளது. இதே சமயம் கொழும்பில் நேற்றிரவு ஊரடங்கு அமுலில் இருந்த சமயம் விமானப்படை உலங்குவானூர்திகள் வானில் சுற்றியபடி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

வன்முறை, தீவைப்பு சம்பவங்கள் ஏற்படாது தடுக்க முன்னேற்பாடு நடவடிக்கையாகவே விமானப்படை உலங்கு வானூர்திகள் ரோந்தில் ஈடுபட்டதாக விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொழும்பில் சில பகுதிகளில் நேற்று வன்முறை

(கொழும்பு)

கொழும்பில் நேற்று சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முனசிங்கபுரவில் சில தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் பின்னர் அவை கட்டுப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமைதியைக் கடைப்பிடிக்க பதில் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

பொது மக்கள் அனைவரும் அமைதியை கடைப்பிடிக்குமாறும் சட்டம் ஒழுங்கை கடைப்பிடிக்குமாறும் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள டி. பி. விஜயதுங்கா நேற்றிரவு நாட்டுமக்களை வேண்டிக் கொண்டார்.

வானொலி, தொலைக்

மதாசாவிற்குச் செய்யும் அஞ்சலி என்றும் அவர் கூறினார்.

பதில் ஜனாதிபதி என்ற வகையில் சட்டம் ஒழுங்கை பேணுமாறு முப்படைத் தளபதிகளையும் பொலிஸ் மா அதிபரையும் தாம் பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொலையாளிகளைக் கண்டு

## ஓசியும் பலி?



(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்பில் இலங்கை மக்கள் கட்சி தலைவர் ஒசி அபயகுணசேகரவும் கொல்லப்பட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

## துக்கதினம் பிரகடனம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டதையடுத்து நேற்றுமுதல் எதிர் வரும் வியாழக்கிழமை வரை தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானத்தை நேற்று அவசரமாகக்கூடிய அமைச்சரவை எடுத்தது.

### இறுதிக் கிரியைகள் வியாழனன்று

நேற்று ஆமர் வீதிச்சந்தியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆறாம் திகதிநடை

## குண்டு வெடிப்பில் 60 பேர் காயம்

### பலர் நிலை கவலைக்கிடம்

[கொழும்பு]

கொழும்பில் நேற்று நண்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 60 பேர் காயம் அடைந்தனர் எனவும் இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிரேமாவின் செயலாளர் மயிரிழையில் தப்பினார்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் செயலாளர்களில் ஒருவரான இவான்ஸ் கூரே குண்டு வெடித்த இடத்திற்கு சிறிது தொலைவில் நின்றபோதும் காயம் எதுவுமின்றித் தப்பிக்கொண்டார். இவர் தான் கொலையுண்டவர்களில் பிரேமதாசாவும் ஒருவர் என்பதை உறுதிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்

### காலை 6மணி முதல் நீக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதையடுத்துதலை நகர் கொழும்பு உட்பட நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் உடனடியாக அமுல் செய்யப்பட்டது. வன்முறை சம்பவங்கள் ஏற்படாது தடுக்கும் முகமாகவே ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

நேற்று பிற்பகல் நாடு முழுவதும் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன்நீக்கப்பட்டது.

## பதில் ஜனாதிபதி தளபதிகள் அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் கொலையைத் தொடர்ந்து பதில்ஜனாதிபதியாக நியமனம் பெற்றுள்ளடிங்கிரிபண்டா விஜேதுங்க முப்படைத் தளபதிகளையும், பொலிஸ்மா அதிபரையும் அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கொழும்பில் வன்முறைகள் ஏதும் நிகழாவண்ணம் பார்க்கும்படி அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

இதேவேளை கொழும்பில் இராணுவம் கடற்படை விமானப்படை என்பனவற்றைச் சேர்ந்த பெருமளவினர் கொழும்பில் பாதுகாப்பில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமா பற்றிய

நிறுத்தப்பட்டது.

1960இல் மாநகரசபைத் தேர்தலில் புனித செபஸ்தியான் வட்டாரத்தில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். அதே ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் ஐ. தே. கட்சியில்போட்டியிட்டு மூன்றாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1961இல் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் கறுவாக்காட்டு வட்டாரத்தில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டார்.

1964இல் ஹேமா வீக்கிரமசிங்காவை மணந்து கொண்டார்.

1965இல் கொழும்பு மத்திய தொகுதியில் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றக் கொறடாவாக நியமனம்.

1968இல் உள்ளூர் ஆட்சி அமைச்சராக நியமனம் பெற்றார்.

1970இல் கொழும்பு மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, ஜே. ஆர். தலைமையிலான எதிர்க்கட்சியில் பாராளுமன்றத்தில் அமர்ந்தார். எதிர்க்கட்சியில் பாராளுமன்றக் கொற

சாங்கம் அலட்டிக் கொள்ளவில்லை. பாதுகாப்பு அவசியமில்லை எனக் கூறிய மேலிடத்து அதிகாரி மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் தலைநகரில் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அரசாங்கமோ அன்றி பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சரோ பதவி விலகவில்லை. அதாவது 'ஜனநாயக ரீதியான மரபுகள்' பேணப்பட வில்லை.

ஆனால் தமிழ்க் குழுவான ஈ.பி.டி.பி. ஜனாதிபதி பிரேமதாசாவின் தனிப்பட்ட படையாகசெயற்படுகின்றது. அதனைக் கொழும்பிலிருந்து வெளியேற்றவேண்டும்என்றஎதிர்க்கட்சிகளின் கோரிக்கை மட்டும் திடுதிப்பென அரசாங்கத்தால்நிறைவேற்றப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து திருமலைக்கு உடனடியாக அவர்கள் 'பார்சல்' பண்ணப்பட்டார்கள்.

மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியில் இருப்பவர்கள் அரச இராணுவத்தையோ அன்றிப் பொலிஸ் படையையோ, நாட்டின் புலனாய்வுத் துறையையோ தமது சொந்த நலனுக்காகப் பயன்படுத்தி வருகின்றமை ஒன்றும் புதுமையானதல்ல. இவ் ஆயுதப் படையினது உதவி கொண்டு தமது அரசியல் விரோதிகளையும், சக்திகளையும் ஒழிப்பதும், ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாக்க முற்படுவதும் புதியதொன்றல்ல.

சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவும் இதற்கு விதிவிலக்கானவரல்ல. 1988, 89ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் இடம் பெற்றபடு கொலைகள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த கறுப்புப் பூனைகளினாலேயே மேற்கொள்ளப்பட்டது எனப் பரவலாகப்பேசப்பட்டது. பலத்த கண்டனமும் எழுந்தது.

ஆனால், 60 000 கொலைகள் நடந்த பிறகும் அதை ஜனாதிபதி பிரேமதாசா கண்டுகொள்ளவில்லை. தமது இறுதித் தேவை நிறைவேறும்வரை அவர்களை கலைக்கவில்லை ஆனால்,தற்பொழுது எதிர்க்கட்சிகளின் பல கோரிக்கைகளில் ஒன்றான தமிழ் குழுவான ஈ.பி.டி. பியினரை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது அதனை சடுதியாக நிறைவேற்றியுள்ளார்.

உண்மையில் லலித் கொலையினால் அரசியல் சதுரங்கத்தில் யாரோ ஒருவரை பலிகொடுக்க வேண்டிய அவசியம் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இருந்தது. அதற்கு அவர் எதுவித தயக்கமுமின்றி பலியிடக்கூடியதாக இருந்தவர்கள் ஈ.பி.டி.பி.குழுவினரேயாகும்.

ஆனால், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு இது முதல் அடியல்ல. பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து தமிழ்க் குழுக்கள் ஓரம் கட்டப்பட்டமையே முதல்விழுந்தஅடியாகும். மாகாண சபைத் தேர்தல் வரையும், அரசியல் தீர்வு குறித்து அரசு ஆர்வம் காட்டுவதாக உலகிற்குக் காட்டிக் கொள்ள தமிழ்க் குழுக்களை அணைத்து வந்த அரசாங்கம் தேர்தல் வந்ததும் தமிழ்க்குழுக்களை கைவிட்டு தமது சுயரூபத்தைக் காட்டியது. தமிழ்க் குழுக்கள் திக்குமுக்காடிப் போய்விட்டன. அதன் பின்னரே ஈ.பி.டி.பிக்கு தற்பொழுது இந்தக்கதி.

இதேவேளை இதனைக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் எதிர்பாராததாக இருக்கலாம். ஆனால் தமிழர்கள் எதிர்பார்த்தது தான். ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தின் வரலாறே தமிழரை என்றும் பலியிடுவதாக இருந்ததே ஆகும்.

(கொழும்பு)

கொழும்பில் நேற்று சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முணசிங்கபுரவில் சில தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் பின்னர் அவை கட்டுப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமைதியைக் கடைப்பிடிக்க பதில் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

பொது மக்கள் அனைவரும் அமைதியை கடைப்பிடிக்குமாறும் சட்டம் ஒழுங்கை கடைப்பிடிக்குமாறும் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள டி. பி. விஜயதுங்கா நேற்றிரவு நாட்டுமக்களை வேண்டிக் கொண்டார்.

வானொலி, தொலைக்காட்சி மூலம் நேற்றிரவு உரை நிகழ்த்திய அவர் மக்கள் கட்டுப்பாட்டை பேணுவதே பிரேமதாசாவிற்குச் செய்யும் அஞ்சலி என்றும் அவர் கூறினார்.

பதில் ஜனாதிபதி என்ற வகையில் சட்டம் ஒழுங்கை பேணுமாறு முப்படைத் தளபதிகளையும் பொலிஸ் மா அதிபரையும் தாம் பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொலையாளிகளைக் கண்டுபிடிக்க அரசு தீவிரமாக முயற்சிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உலகத் தலைவர்கள் கவலையும் கண்டனமும்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை குறித்து உலகத்தலைவர்கள் பலரும் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். மேலும் பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்திய அரசியல் தலைவர்கள் அவரின் மறைவுக்கு கவலை தெரிவித்துள்ளனர்.

சார்க்நாடுகளில் ஒரு சிறந்த தலைவரை உலகம் இழந்துவிட்டது என இந்திய ஜனாதிபதி சங்கர்தயாள்சர்மா வெளியிட்ட இரங்கற் செய்தியில் தெரிவித்தார். மேலும் இந்திய உப ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் ஆகியோரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

பிரேமதாசா மக்கள் மத்தியில் பிரபல்யமான முன்னணித் தலைவர்களில் ஒருவர் என்று பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக்கான் கூறியுள்ளார்.

வன்செயலில் பிரேமதாசா கொலையுண்டதாக நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா கண்டனம் செய்துள்ளார்.

பங்களாதேஷ் பிரதமரும், தென்னாசிய ஒத்துழைப்பு அமைப்பானசார்க்அமைப்பின் தற்போதய தலைவருமான திருமதி பேகம் கலிதா ஸியா சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கொலைச்செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளார்.

## பிரேமா கொலையில் புலிகளுக்கு தொடர்பில்லை

### லோறன்ஸ் திலகர் மறுப்பு

பிரேமதாசா கொலையுண்ட வெடிகுண்டுச் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதை விடுதலைப் புலிகளின் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பாரிஸ் நகரிலிருந்து ஏ. எப். பி. செய்தித் தாபனத்திற்கு தகவல் அளித்த அவர் மேலும் கூறுகையில் கடந்த வாரம் கொலை செய்யப்பட்ட லலித்தின் ஆதரவாளர்கள் பிரேமதாசாவைப் பழிக்குப் பழி வாங்கும் நோக்குடன் கொலை செய்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

## பதில் பிரதமராக கூரே மந்திரிசபை உடன் கூடியது

பதில்ஜனாதிபதியாக நேற்று டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்றதைத் தொடர்ந்து பதில் பிரதம மந்திரியாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா குண்டு வெடிப்பில்கொல்லப்பட்டதையடுத்து மந்திரிசபை அவசரமாக கூடி நிலைமையை ஆராய்ந்தது.

பின்னர் 3.15 மணியளவில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## துக்கதினம் பிரகடனம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டதையடுத்து நேற்றுமுதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரை தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானத்தை நேற்று அவசரமாகக்கூடிய அமைச்சரவை எடுத்தது.

## இறுதிக் கிரியைகள் வியாழனன்று

நேற்று ஆமர் வீதிச்சந்தியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆறாம் திகதிநடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெடிகொளுத்தி ஆரவாரம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் கொலைச் சம்பவத்தை கேள்விப்பட்ட தென் மாகாண மக்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

''கொலைகாரன் இறந்தான்'' என்று கோஷங்கள் எழுப்பப்பட்டதாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

## அதிகாரப் போட்டி

[லண்டன்]

ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் கொலையைத் தொடர்ந்து சிறிலங்காவில் அரசியல் சூனியம் ஏற்பட்டுள்ளதாக பி.பி.ஸி.தெரிவித்தது.

யு. என். பியில் அரசியல் தலைமைப் போட்டி ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் பி. பி. ஸி. செய்தி மேலும் கூறியது.

## இந்தியாவில் துக்கம்

(டில்லி)

கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தியா முழுவதும் துக்கம் மூன்று நாள்களுக்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நேற்று முதல் மூன்று நாட்களுக்கு நாடுபூராவும் துக்கம் அனுஷ்டிக்குமாறு இந்திய மத்திய அரசு கோரியுள்ளது. இக்காலப் பகுதியில் இந்தியத் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்படுவதோடு உத்தியோக பூர்வ வைபவங்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுத்தப்பட்டது.

1960இல் மாநகரசபைத் தேர்தலில் புனித செபஸ்தியான் வட்டாரத்தில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். அதே ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் ஐ. தே. கட்சியில்போட்டியிட்டு மூன்றாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1961இல் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் கறுவாக்காட்டு வட்டாரத்தில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டார்.

1964இல் ஹேமா விக்கிரமசிங்காவை மணந்து கொண்டார்.

1965இல் கொழும்பு மத்திய தொகுதியில் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றக் கொறடாவாக நியமனம்.

1968இல் உள்ளூர் ஆட்சி அமைச்சராக நியமனம் பெற்றார்.

1970இல் கொழும்பு மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, ஜே. ஆர். தலைமையிலான எதிர்க்கட்சியில் பாராளுமன்றத்தில் அமர்ந்தார். எதிர்க்கட்சியில் பாராளுமன்றக் கொறடாவாக நியமனம். அதேஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாயநாடுகள் அமைப்பு மாநாட்டின் பொதுச் சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1976இல் ஐ. தே. கட்சியின் பிரதித் தலைவராக நியமனம் பெற்றார்.

1977இல் கொழும்பு மத்திய தொகுதி முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு சபைத் தலைவராகவும், உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாண அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

1978 பெப்ரவரி 6ஆம் திகதி சிறிலங்காவின் பிரதமரானார். அதே ஆண்டில் கிராமோதயத் திட்டத்தை ஆரம்பித்தார்.

1979இல் ஏலவே உள்ள அமைச்சுப் பொறுப்புடன் பெருந்தெருக்கள் அமைச்சையும் பொறுப்பேற்றார்.

1980இல் ஐ. நா. சபையின் (நியூயோர்க்) வீடற்றோருக்கான வதிவிட ஆண்டாக ஓர் ஆண்டைப் பிரகடனப்படுத்தும்படி பிரேமதாசா கோரியதற்கிணங்க 1987 வீடற்றோருக்கான வதிவிட ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1984இல் யாப்பகூவவில் அமைக்கப்பட்ட முதலாவது மாதிரிக் கிராமத்தில் 1984 டிசம்பர் 8ஆம் திகதி அமைச்சு இடம் பெயர்வு சேவையை ஆரம்பித்தார்.

1987ஜூலை 29இல் கைச்சாத்திடப்பட்ட சிறிலங்கா இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பம்முதல்எதிர்த்தவர்.

60,000க்கு மேற்பட்ட ஜே. வி. பி. இளைஞரின் மரணத்திற்கு இவரே காரணம் என்று கருதப்படுகிறது.

1988இல் பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தைப் பிரேமதாசா ஆரம்பித்து வைத்ததற்காக பிரித்தானிய சமூக வீடமைப்பு நிதியம் சர்வதேச விருது வழங்கிக் கௌரவித்தது.

1988 டிசம்பர் 9இல் சிறிலங்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 1989 ஜனவரி 2இல் சிறிலங்காவின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பிரேமதாசா பதவி ஏற்றார்.

1991 செப்ரெம்பரில் இவருக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் குற்ற விசாரணை கோரும் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்த வேண்டும் என்பதில் முனைப்பாய் இருந்தவர்.

1992இல் சார்க் அமைப்புகளின் தலைவரானார்.

1994இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டவர்.

நாட்டின் தலைவராக இருந்தபொழுது 1958இல் சுட்டுக்கொல்லப்பட்ட எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்குப் பிறகு கொல்லப்பட்ட இரண்டாவது தலைவர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆவார்.

ஈழநாதம்

# தொழிலாளர்களும் ஆயுதம் ஏந்தி போராட்டத்தில் இணைய வேண்டும்

## மேதினக் கூட்டத்தில் கரிகாலன் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் இன்று சிறிலங்கா அரசினது இராணுவ, பொருளாதார ரீதியான அடக்குமுறைகள் உட்பட பல்வேறு அடக்கு முறைக்கும் அட்டூழியங்களுக்குமுள்ளாகி வருகின்றது. இவ்வாறான அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறுவதாயின் அனைத்துத் தொழிலாளர்களும் ஆயுதம் ஏந்தவேண்டும். ஆயுதம் ஏந்தி தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டும்''. இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்ற மேதின பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், சிறிலங்கா இனவாத அரசு தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காக அன்று முதல் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. தமிழ் மக்கள் மீது பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைப் படுகொலைசெய்துள்ளது என்றார்

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் பேசும்போது, தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் யுகம் யுகமாக பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வந்துள்ளது. இதனால் எமது தொழிலாளர் வர்க்கம் இன்று தமது தொழில்களையே இழந்துள்ளது

இவ்வாறான நிலைமைகளை நீக்குவதற்கு அனைத்துத் தொழிலாளர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

விடுதலைப்புலிகளின் நீதித் துறைப்பொறுப்பாளர் திரு. பரா உரை நிகழ்த்தும் போது' தமிழினத்தின் எதிரியான சிறிலங்கா இனவாத அரசு நாட்டின் வளங்கள் அனைத்தையும் திரட்டி தமிழினத்தை அழித்தொழிக்க முயல்கிறது.

இவ் அரசு இன்று நேற்றல்ல பல தசாப்தங்களின் முன்பிருந்தே தொழிலாளர் வர்க்கம்மீது காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளைக் கட்டவிழ்ந்து விட்டுள்ளது. இவ்வாறான இனவெறி பிடித்த சிங்கள அரசு ஒருபோதும் தொழிலாளர்களது உரிமைகளை வழங்கப்போவதில்லை. இவ் உரிமைகளை பெறுவதாயின் அனைத்துத்தொழிலாளர்களும் ஆயுதம் தாங்கிப்போராடமுன்வரவேண்டும் என்றார்.

தமிழீழக்கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் பேசும்போது;

தமிழ்மக்கள் மீது இனவாத சிங்கள அரசு பல்வேறு அடக்குமுறைகளையும், அட்டூழியங்களையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அத்துடன் பெரியளவிலான இனப்படுகொலையையும் நடாத்திக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் தமது தொழில்களையே இழந்துள்ளனர். இவ்விழப்புக்களில் இருந்து தொழிலாளர்கள் விடுபடுவதற்கு ஒரே ஒரு வழி நாம் அனைவரும் இணைந்து போராடி எமது மண்ணை மீட்டெடுத்து தொழில் வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி உரையாற்றும் போது;

இன்று உலகில் சரிபாதியினர் பெண்கள் ஆனால் அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு ஊதியமாகக் கிடைப்பதோ பத்தில் ஒரு வீதமே. அதேவேளை உலகத்தில் நூறில் ஒரு வீதச் சொத்துக்களே பெண்களுக்கு இருக்கின்றது

பெண்கள் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்து பத்தில் ஒரு வீதத்தை ஊதியமாகப் பெறுகின்றார்கள் என்றால் ஏன் இப்படி என்று நாங்கள் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். பெண்கள் உதிரி உதிரியாக உழைப்பதால் அவர்கள் தங்கள் உழைப்பின் மகத்துவத்தை, பெறுமதியை உணர்வதில்லை. இன்று எமது பெண்கள் பல வழிகளிலே இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

கணவன்மாரை இழக்கும் பெண்கள் தமது குழந்தைகளைக் காப்பாற்ற வேலைக்குச் செல்லும்போது அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை தட்டிக்கேட்டால் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். இந்த நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது இதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்

இவர்களைவிட பல்வேறு தொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்தினார்கள.

இக்கூட்டத்தின் முடிவில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.



நேற்று யாழ். நகரில் நடைபெற்ற மேதினப் பேரணியில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினர்.

# மியாங்கல்குளம் மோதலில் 15 புலிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மியாங்கல் குளம் காட்டுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இருநாட்கள் நடைபெற்ற மோதலில் பதினைந்து புலிகள் வீரச்சாவடைந்தனர். இதன் போது இராணுவதரப்பு சேத விபரங்கள் தெரியவில்லை

கடந்த 26ஆம் திகதி காலை 11 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மியாங்கல் குளம் காட்டுப் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. சுமார் பத்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இம்மோதலில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட தேசவிபரங்கள் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் பதினொரு வேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

- கப்டன் தனசேகர் / வரதன் (கணேசமூர்த்தி வரதசுந்தரன் களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு)
- லெப்டினன்ட் வித்தியானந்தன் (கைலாயபிள்ளை - சுரேஸ் பாக்கியவத்தை - பொத்துவில்)
- 2ஆம் லெப்டினன்ட் சௌந்தரராஜா / சௌந்தரராஜன் (அரியரட்ணம் மனோரஞ்சன் மகிழவெட்டுவான் ஆயித்தியமலை)
- வீரவேங்கை பௌதீஸ்வரன் கஜேந்திரன் (சாமித்தம்பி குமாரசாமி - துறைநீலாவணை மட்டக்களப்பு)
- வீரவேங்கை லதாங்கன் (கிருஷ்ணபிள்ளை உதயகுமார் - ஆரயம்பதி - 3 காத்தான்குடி)
- வீரவேங்கை அம்புஜன் (சித்திரவேல் விபுலானந்தன் பன்குடாவெளி மட்டக்களப்பு)
- வீரவேங்கை திருமூர்த்தி (சிவலிங்கம் பரமலிங்கம் - மாரியம்மன் கோயில்வீதி, சேனைக்குடியிருப்பு கல்முனை)
- வீரவேங்கை ஞானதரன் / டக்ளஸ் (செல்லப்பிள்ளை ஜீவானந்தம் - தேவாலய வீதி நாவற்குடா மட்டக்களப்பு)
- வீரவேங்கை செல்வமணி (கந்தையா சுதர்சன் சம்மாந்துறை அக்கரைப்பற்று அம்பாறை)
- வீரவேங்கை சிவாகரன் (சிவஞானம் பிரபாகரன் பண்டாரியவெளி கொக்கட்டிச்சோலை)
- வீரவேங்கை தேசியன் (குழந்தைவேல் ரகுநாதன் - கடற்கரை வீதி ஆரயம்பதி)

ஆகியோரே இம்மோதலின் போது வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

மறுநாள் (27ஆம் திகதி) மாலை 5 மணியளவில் கிளியர்பண்ணை சென்ற விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மீண்டும் கடும் மோதல் இடம்பெற்றது. சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இம்மோதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை. புலிகள் தரப்பில் நான்குபோராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- லெப்டினன்ட் தர்மராஜ் / ஜோசப் (நாகமணி ஜேசுராஜ் - ஆறுமுகத்தான் குடியிருப்பு ஏறாவூர்)
- 2ஆம் லெப்டினன்ட் அமலநாதன் (ஆறுமுகம் ஜீவப்பிரகாஸ் கிண்ணையடி வாழைச்சேனை மட்டக்களப்பு)
- வீரவேங்கை கதிரேசன் (தம்பிராஜா நேசதுரை நற்பிட்டிமுனை கல்முனை)
- வீரவேங்கை மதுரகீதன் நடராசா ஈஸ்வரன் - கொடுவாமடு செங்கலடி மட்டக்களப்பு).

இந்த 15 போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மூளாய் குடியிருப்பு மீது எறிகணைத் தாக்குதல்

காரைநகர் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மூளாய் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரவு பத்து மணி முதல் 10 நிமிட நேரத்திற்குதொடர்ச்சியாக 10 ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டு மூளாய் தெற்கு ஐயனார் கோவிலடி வெளிப் பகுதியில் விழுந்து வெடித்தன. பலத்த அதிர்வுடன் விழுந்து வெடித்த அச்சத்தினால் அருகாமையில் இருந்து வந்த மக்கள் பதற்றமடைந்த நிலையில் வட்டுக்கோட்டை, மாவடி பகுதி நோக்கி சென்றனர். தாக்குதல் சத்தங்கள் ஓய்ந்ததும் சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

மே தினமான நேற்று காலை 6 30 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. (யோ)

## சிசுவின் சடலம் மீட்பு

(சுன்னாகம்)

அநாதரவான நிலையில் காணப்பட்ட சிசுவொன்றின் சடலமொன்று சங்குவேலிப்

## 1000 சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நீதி உயர்கல்வி அமைச் சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா பொது மன்

## பயிற்சி விமானமே பறந்ததாம்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றபோது கனத்தைபொது

தன் (கைலாயபிள்ளை - சுரேஸ் பாக்கியவத்தை - பொத்துவில்)
ஃ 2ஆம் லெப்டினன்ட் சௌந்தரராஜா / சௌந்தரராஜன் (அரியரட்ணம் மனோரஞ்சன் மகிழவெட்டுவான் ஆயித்திய மலை)
ஃ வீரவேங்கை பௌதீஸ்வரன் கஜேந்திரன் (சாமித்தம்பி குமாரசாமி - துறைநீலாவணை மட்டக்களப்பு)
ஃ வீரவேங்கை லதாங்கன் (கிருஷ்ணபிள்ளை உதயகுமார் - ஆரயம்பதி - 3 காத்தான்குடி)

### சிசுவின் சடலம் மீட்பு

(சுன்னாகம்)

அநாதரவான நிலையில் காணப்பட்ட சிசுவொன்றின் சடலமொன்று சங்குவேலிப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. உடுவில் - சங்கானை வீதியில் வழுக்கியாற்று மதவின் கீழ்ப் புறமொன்றில் இச்சிசுவின் உடல் துணியொன்றிலே சுற்றப்பட்ட நிலையில் மீட்கப் பட்டுள்ளது. இத்துணிப்பொதி மூன்று தினங்களாக காணப் பட்டதாகவும் சிசுவின் உடலொன்று அதனுள் இருக்குமென தாங்கள் எண்ணவில்லை எனவும் அதனைக் கண்டவர்கள் கூறினர். இதுபற்றி காவல் துறையினருக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. (11)

## படகுசேவை

### கலந்துரையாடல்

கிளாலி-பூநகரி படகுசேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிளாலியில் படகுத்துறைக்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

பிரேமதாசா

★ ஜனாதிபதியின் தனிப்பட்ட ஆலோசகர்முகைதீன்.

மேலும் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பதில்

றிருக்கும் பிரதமர் டி. பி. விஜயதுங்கா ஒரு மாத காலம் அப்பதவியில் நீடிக்க முடியும். அதற்கிடையில் பாராளுமன்றத்தைக் கூட்டி புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வைக்க வேண்டும் 225 உறுப்பினர் கொண்ட சிறிலங்காப் பாராளுமன்றத்தில் ஆளுங் கட்சிக்கு 125 உறுப்பினர்கள் மட்டும் இருப்பது குறிப்பிடத் தக்கது.

## எறிகணைத் தாக்குதல்

காரைநகர் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மூளாய் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இரவு பத்து மணி முதல் 10 நிமிட நேரத்திற்குதொடர்ச்சியாக 10 ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டு மூளாய் தெற்கு ஐயனார் கோவிலடி வெளிப் பகுதியில் விழுந்து வெடித்தன.

பலத்த அதிர்வுடன் விழுந்து வெடித்த அச்சத்தினால் அருகாமையில் இருந்து வந்த மக்கள் பதற்ற மடைந்த நிலையில் வட்டுக்கோட்டை, மாவடி பகுதி நோக்கி சென்றனர். தாக்குதல் சத்தங்கள் ஓய்ந்ததும் சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

மே தினமான நேற்று காலை 6 30 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. (யோ)

## 1000 சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நீதி,உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்தின் சிபார்சுக்கு இணங்க ஆயிரம் சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா பொது மன்னிப்பு அளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பால்மா இறக்குமதிக்கு தடை விதிக்கப்படலாம்

பால்மா இறக்குமதியை அடுத்து வரும் பத்து ஆண்டுகளுக்குள் தடை செய்ய சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் கட்டங் கட்டமாக பால்மா இறக்குமதியை தடைசெய்வதற்கும் கால்நடை பண்ணை தொழிலை விருத்தி செய்வதற்கும் துரித அபிவிருத்தித்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாகவும் சிறிலங்காவின் அமைச்சாவை தீர்மானித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை1994ஆம் ஆண்டளவில் சில பொருள்களின் இறக்குமதியை அரசு தடை செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப்பேச்சாளர்ஒருவர் தெரிவித்தார்.

செத்தல்மிளகாய்.வெண்காயம், சோளம், அரிசி, பருப்பு கறுப்பு உழுந்து ஆகியவற்றின் இறக்குமதியையே படிப் படியாக அடுத்த வருடம் முதல் தடைசெய்யப் போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 50 பேர் விடுதலை கோரும் ஆட்கொணர்வு மனு

(கொழும்பு)

பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐம்பது தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு கோரும் ஆட்கொணர்வு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த ஆட்கொணர்வு மனுக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் உறவினர்களால் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி மூலமாக வெவ்வேறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நிலவரங்களை

தீர்மானித்துள்ளது. உடனடி செயல்பாடுகளுக்கு அமைச்சர்கள் ஏ. ஸீ எஸ். ஹமீத், ரணில் விக்கிரமசிங்க பெஸ்டஸ் பெரேரா, வீரசிங்க மல்லிமாராச்சி, சிறிசேனகூரே ஆகியோரைக் கொண்ட அமைச்சரவை உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## வாழைச்சேனை அகதிகட்கு உணவுப் பற்றாக்குறை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை அகதி முகாமில் இருப்போர் தமக்கு அரசு வழங்கும் நிவாரணம் குறைவாக இருப்பதாகப் புகார்செய்கின்றனர். இம்முகாமில் உலர் உணவுப் பொருள்கள் 15 நாட்களுக்கு ஒருதடவையோ அல்லது மாதமொரு தடவையோ தான் வழங்கப்பட்டுவருகிறது.

இதேவேளை வாகரையில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு மாதம் ஒருமுறை மட்டுமே நிவாரணப் பொருள்களை வாழைச்சேனையிலிருந்து வாகனங்களில் கொண்டுசெல்ல அனுமதி கிடைப்பதால் அங்கும்உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெற்ற இக்கூட்டத்தில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் பேசும் போது, தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் யுகம் யுகமாக பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வந்துள்ளது. இதனால் எமது தொழிலாளர் வர்க்கம் இன்று தமது தொழில்களையே இழந்துள்ளது

இவ்வாறான நிலைமைகளை நீக்குவதற்கு அனைத்துத் தொழிலாளர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

### பயிற்சி விமானமே பறந்ததாம்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியின் இறுதிக் கிரியைகள் இடம் பெற்றபோது கனத்தைபொது மயானத்திற்கு மேலாகப் பறந்து சென்றது விமானப் படையின் பயிற்சி விமானமே யாகுமென்றுபாதுகாப்புராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர் சீப் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இந்த இறுதிக்கிரியைகளின் போது விமானத்திலிருந்துகண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப் பட்டதாகச் செய்திகள் வெளி வந்ததும், விமானப்படை தலைமையகம், விமானப்படை விமானங்கள்எதுவும்கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசவில்லை என்று மறுத்திருந்ததும் தெரிந்ததே.

## மேதின எழுச்சிப் பேரணியில் தலைவர் பிரபாவின் படம்

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற மேதினப்பேரணியில் ''தங்கத் தமிழ் இனத்தின் தலைவன் இவன், பல தகுதி ஒருங்கிணைந்த தலைவன் இவன்'' என்ற மகுடவாசகத்துடன் கூடிய வகையில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் உருவப்படம் பெரும் அளவிலான மக்களால் ஏந்திச் செல்லப்பட்டது.

## இறைச்சிக்கான கால்நடை குடாநாட்டில் தட்டுப்பாடு

(குருநகர்)

குடாநாட்டுப் பகுதிகளில் இறைச்சி உணவுக்காகப் பயன்படுத்தும் கால்நடைகள்தட்டுப்பாட்டால் இறைச்சிக்கடைகள் பல மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கச் செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் கருத்துத்தெரிவிக்கையில் குடாநாட்டுக்கு அப்பால் வன்னிப் பிரதேசங்களில் இருந்து கடந்த காலங்களில் கால்நடைகளை கொணர்வதுபோல் சாத்தியம் இன்மையாலே இறைச்சி உணவுத் தட்டுப்பாடு குடாநாட்டுள் ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாகவே இறைச்சிக்கடைகள் பல மூடப்பட்டிருக்கிறது என அவர் தெரிவித்தார். (21)

## விளையாட்டு

மாவட்டரீதியில் யாழ் செயலகத்தினால் நடாத்தப் பட்ட மாபெரும் ''ஹாக்கி'' இறுதியாட்டத்தில் கிறாஸ் கொப்பேர்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய யாழ். பல்கலைக்கழக அணி 1-2 என்ற கோல் கணக்கினால் வெற்றிபெற்றுள்ளது.



நேற்று யாழ். நகரில் நடைபெற்ற மேதினப் பேரணியில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினர்.

## உழைப்பவர் கைகளில் அதிகாரம் ஏறிட தமிழீழமே பரிகாரம்

### மேதினத்தில் கோசம்

[யாழ்ப்பாணம்]

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மாபெரும் மேதின ஆர்ப்பாட்டப் பேரணியில் இடம் பெற்ற கோசங்கள் வருமாறு:

வடக்கென்றும் கிழக்கென்றும் தாயகத்தைப் பிரிய விடோம்,

வடக்கிலும் கிழக்கிலும் மொழி ஒன்று இனம் ஒன்று பண்பாடு ஒன்று தாயகம் ஒன்று.

சர்வதேசமே தேசிய இனங்களின் எழுச்சி;இது வரலாற்று நியதி,

சர்வதேசமே இங்கு ஒரு தேசம் உருவாகிறது.

ஒடுக்கப்பட்ட தேசங்களின் உழைக்கும் மக்களே ஒன்றிணைவீர்.

களத்துச் செய்திகளை காவியங்கள் ஆக்கிடுவோம்.

உழைப்பவர்கள் கைகளில் அதிகாரம் ஏறிட தமிழீழமே பரிகாரம்,

வேண்டாம் தங்கு நிலைப் பொருளாதாரம்; வேண்டும் இங்கு சுயசார்புப் பொருளாதாரம்,

வீரமுண்டு துணிச்சலுண்டு வளமுண்டு மண்டியிடோம்,

கல்விச் சமுதாயமே ஒன்றிணைவோம், தேச நலனை முன்னெடுப்போம்.

புதிய கல்வியை வகுத்திடுவோம்; புதிய பாதையில் நடந்திடுவோம். [17]

## ஒலிப்பதிவு நாடாவில் 11 தடவை துப்பாக்கி வேட்டு

லலித் படுகொலை செய்யப்பட்ட கிருலப்பனை கூட்டத்தில் ஒலிப்பதிவு செய்துகொண்டிருந்த ஒலிப்பதிவு நாடாவில் 11 தடவை துப்பாக்கி வேட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தின்போது கொலையாளியும், லலித்தின் மெய்க்காவலரும் பரஸ்பரம் துப்பாக்கிச்சூடு நடத்தியது தெரிந்ததே.

கிருலப்பனை கூட்டம் தொடர்பான வீடியோ ஒளிப்பதிவு நாடா ஏற்கனவே நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 1-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9261

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9038, 27-6563, 22-3887, 27-2088, 27-9649, 41-5015, 28-0364, 26-8130, 27-6704, 27-0991, 28-2657, 41-1531, 71-4984, 27-7281,, 28-1992 41-9530, 24-5119

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-4760, 41-8823, 27-2016, 26-1019, 24-7087 41-2659, 24-3594 '26-9495' 26-4579 26-7663, 40-1737, 26-0852

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 02 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.